VISIT…

திருப்பதியிலிருந்து திரும்பி வரும்போது நேர்ந்த விபத்தில் அவளுடைய பெற்றோர் இருவரும் இறந்து போனதாகச் சொன்னார்கள்.

எப்படி முடியும்?

அறிவிக்கப்பட்ட விவரத்தைச் சரியாக உணர முடியாமல் மயூரி மலங்க விழித்தபோது விஷயம் தெரிவிக்க வந்த போலீஸ் அவளைத் தேற்றுமுகமாக "விதிம்மா, விதி, விதி முடிந்தது. வலியின்றிச் சம்பவ இடத்திலேயே போய்ச் சேர்ந்துவிட்டார்கள்" என்று அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

விதி முடிந்தது. அவர்கள் வலியின்றிப் போய்விட்டார்கள். ஆனால் பெற்றோரின் விதி முடியப்போகிறது என்று தெரியாமல் ஐயோ, என்ன விலை கொடுத்துவிட்டாள்.

கட்டுப்படுத்த முடியாமல் மயூரி வீறிடலானாள்.

6

மயூரியின் நிலையைப் பார்த்துவிட்டு, விபத்து விவரம் அறிவிக்க வந்த போலீஸ் அதிகாரியே டாக்டரை வரவழைத்து ஊசி போட்டுத்தான், அவளை அமைதிப்படுத்தும்படி ஆயிற்று.

விஷயம் தெரிந்ததும் உற்றார், உறவினர், சொந்த பந்தம் எல்லோரும் வந்தார்கள். ஆனால் முறைப்படி வந்து, ஆக வேண்டிய காரியங்களைப் பார்த்தார்களே தவிர, நெஞ்சில் மரண காயம்பட்டிருந்த பெண்ணை அரவணைத்து ஆறுதல் படுத்த, அங்கே யாரும் இல்லை.

மயூரியுடைய நண்பர்களும் ஓடோடி வந்து சேர்ந்தார்கள். அவள் உள்ளே இருந்த இன்னொரு பெருவலியால், அவர்களின் ஆறுதல் மொழியும் பலனின்றிப் போயிற்று.

மயூரி முட்டாள் அல்ல.

'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்பதுபோலப் பிறந்த உயிர்கள் மரித்துத்தான் ஆக வேண்டும் என்பதோடு அந்த இறப்பு நம் கையில் இல்லை என்பதும் தெரியாதவள் இல்லை.

ஆனால் அந்த இறப்பை அவளுடைய பெற்றோர் தற்கொலையால் தங்கள் முடிவாய்ச் செய்து கொண்டுவிடக் கூடாதே என்று அவள் கொடுத்த பிரம்மாண்டமான விலை, முழுக்க முழுக்க வீண் என்பதுதான் அவளால் தாங்க முடியாததாக இருந்தது.

பெற்றோரும் இல்லை. அவள் வாழ்வும் அழிந்து போயிற்று.

இனி என்ன என்று எண்ணிப் பார்க்கக்கூட முடியாத பேரழிவு.

இதிலெல்லாம் இந்தக் காலத்தில் வாழ்வு அழிந்து போவது இல்லை என்று அவளால் நினைக்க முடியவில்லை. அவள் வாழ்வு அழிந்துதான் போயிற்று. இனி அந்த மாதிரியெல்லாம் அவளால், இன்னொருவரோடு எப்படிப் பழக முடியும்? முடியாது என்பது அவளுக்கு நிச்சயம்.

அத்தோடு, பேரிழிவும் கூட.

எவ்வளவு இழிவான பேரம். அதற்குப் போய் இடம் கொடுத்து விட்டாளே. கபடற்று அவளுக்காக உருகும் நண்பர்களின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட மயூரியால் முடியவில்லை. அந்த அவமானம் இனி வாழ்நாள் முழுவதும் அவளைச் சுட்டெரிக்குமே?

எல்லாமே அவசியமே இல்லாமல்.

கடவுள் எவ்வளவு பொல்லாதவர். அவளை விலை கொடுக்கச் செய்துவிட்டு திருப்பம் தேடி வந்த அவளுடைய

பெற்றோருக்கு அவமானம். பணத் தொல்லை போன்ற எத்தனையோ விதமான உலகத் துன்பங்களில் இருந்து விடுதலையும் கொடுத்து விட்டாரே.

கடவுள் பொல்லாதவரா? அல்லது இது அவர் அவளுக்கு வைத்த சோதனையா? சே. எவ்வளவு கேவலமாகத் தோற்றுவிட்டாள்.

இறுகிப் போய்க் கல்லாய் அமர்ந்திருந்தவளிடம் யாரையோ கூட்டி வந்தார்கள்.

சுயம்புலிங்கத்துடைய ஒரு சில நண்பர்களுள் ஒருவரான சிவநேசன். இன்னொருவரையும் அழைத்து வந்திருந்தார்.

துக்கம் விசாரிக்க என்று வந்து, காயத்தில் கத்தியை விட்டுத் திருகுவதற்கு இவர்கள் வராமலே இருக்கலாம் என்று மயூரி உள்ளுரத் தவித்துக் கை குவித்தபோது தான் ஓர் எல்ஐசி ஏஜெண்ட் என்றார் வந்தவர்.

அவருக்கு விஷயத்தைக் கேள்விப்பட்டபோது நம்பவே முடியவில்லையாம். எத்தனையோ ஆண்டுகளாக விடாமல் விரட்டிய பிறகு இரண்டுநாள் முன்புதான் திருப்பதியில் தற்செயலாகச் சந்தித்த சுயம்புலிங்கம் இரண்டு லட்சம் ரூபாய்க்குப் பாலிசி எடுத்தாராம். முதல் தவணை மட்டும்தான் கட்டியிருக்கிறதாம்.

"அது கூடம்மா, தற்சமயம் கைவசம் பணம் இல்லை என்று நழுவப் பார்த்தார். நானே கட்டிக் கொள்வதாகச் சொல்லிக் கையெழுத்து வாங்கிக் கொண்டேன். அது எவ்வளவு நல்லதாகப் போயிற்று பாரம்மா. அதுவும் கூட பாலிசி எடுத்த உடனேயே விபத்து என்றால், தற்கொலையா, என்று விசாரணை செய்ய வேண்டும், அது இது என்றார்கள். நல்ல வேளையாக, எஸ்டிஎம் எங்கள் அலுவலகத்துக்கு

மேற்பார்வைக்காக வந்திருக்கிறார். விபத்தில் மாட்டியிருந்த குவாலிஸ் காரைக் காட்டி, இவ்வளவு நன்றாக வாழுகிறவர் ஏன் தற்கொலை செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னேனா, செக் கொடுக்கச் சொல்லி விட்டார். ஆற விடாமல் உடனே உன் பணத்தை வாங்கி வந்தேன். இதில் ஒரு கையெழுத்துப் போட்டுவிட்டு செக்கை வாங்கிக் கொள்ளம்மா" என்று அவளது கையெழுத்தை வாங்கிக் கொண்டு, இரண்டு லட்சம் ரூபாய்க்கு உரிய காசோலையை மயூரியிடம் கொடுத்துவிட்டுப் போனார் புதியவர்.

கையிலிருந்த காசோலையை வெறித்து, நோக்கினாள் மயூரி.

கடைசியாக இந்த ஒரு சிறு ஆறுதல் கூடவா இல்லாது போக வேண்டும்.

திருப்பதி சென்று எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு பெற்றோர் திரும்பி வந்தார்கள். அந்த நம்பிக்கை அழியுமுன், கடவுள் அவர்களை தன்னிடம் அழைத்துக் கொண்டார் என்று எண்ணினாளே, அதுவும் அந்தக் காவல், அதிகாரி சொன்னது போல், 'வலியின்றிச் சம்பவ இடத்திலேயே போனதும் நல்லதுதான். இன்னமும் வாழ்ந்திருந்தால், இன்னும் என்னென்ன துன்பங்கள் அனுபவிக்க நேர்ந்திருக்குமோ? ஏன் அவள் விஷயம்கூட எப்படியாவது தெரிய வந்தால், என்னமாய்த் துடித்துப் போகக் கூடும்? அதிலெல்லாம் இருந்து அவள் பெற்றோரைக் கடவுள் காப்பாற்றியிருக்கிறார் என்று பலவாறு யோசித்து மனதில் கொஞ்சம் ஆறுதல் அடைந்தாளே?

கடைசியாகப் பார்த்தால் வெளிச்சத்துக்கு வழியே இல்லை என்று வருத்தமும் நிராசையுமாக வேண்டும் என்றே அல்லவா உயிரை விட்டிருக்கிறார்கள்.

அந்த நிலையிலும் மகளுக்கு நல்லது செய்ய வேண்டுமாம். இரண்டு லட்சத்துக்குப் பாலிசி எடுத்து தற்கொலை என்று தெரிந்தால் அந்தப் பணம் மகளுக்குக் கிடைக்காதே என்று யோசித்து விபத்து போலக் காட்டி உயிரை விட்டிருக்கிறார்கள்.

ஆக திருப்பதிக்குக் கிளம்பும்போதே திரும்பி வரவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அது தெரியாமல் அவர்களைக் காக்கும் கடவுளாகத் தன்னை எண்ணிக் கொண்டு...

திடுமென, மயூரியுடைய நண்பர்கள் எல்லாரும் அறைக்குள் வந்தனர். ஒரு பாதுகாப்பு வளையம் போல அவளை ஒட்டிக் கொண்டு நின்றனர்.

மயூரியின் கையிலிருந்த காசோலையைக் கவனித்து அனு அதை வாங்கி அலமாரியுள் வைத்து மூட, விவேக் விவரம் சொன்னான்.

''ஆன்ட்டி, அங்கிள்... போஸ்ட் மார்ட்டம் முடித்துக் கொண்டு வருகிறார்கள்'' என்றான் மெல்லிய குரலில்.

'கொண்டு வருகிறார்கள்' அவர்களாக வரவில்லை.

ஹாலில் கிடத்தப்பட்டிருந்த உடல்களைப் பார்க்க மயூரியை அழைத்துச் சென்றார்கள்.

''இது'க வேற குறுக்கே குறுக்கே வந்துவிட்டு...'' என்று உறவுக்காரப் பெரியவர்கள் முணுமுணுத்த போதும், நண்பர்கள் வளையம், அவளை விட்டு அகலவில்லை.

ஹாலின் நடுவே கிடந்த இரு வெள்ளைத் துணி மூட்டைகளும்தான், அவளுடைய பெற்றோர் என்றால் மயூரியின் மனம் அதை ஒத்துக்கொள்ள மறுத்தது.

எப்படி முடியும்?

இல்லையென்று யாராவது சொல்லமாட்டார்களா என்ற தவிப்புடன் விழியகலச் சுழன்ற பார்வை சட்டெனத் தடைப்பட்டு நின்றது.

அங்கே அவன் நின்றிருந்தான்.

மனுபரதன்.

என்ன திண்ணக்கம் இருந்தால் அவன் இங்கே வருவான்?

சட்டெனத் திரும்பி உள்ளே சென்றாள் அவள்.

கூடவே வந்த நண்பியருள் ஒருத்தியை அழைத்து ''அனு அங்கே ஹாலில் ஜன்னல் பக்கமாக வெள்ளையும் நீலமுமாகக் கோடு போட்ட சட்டை அணிந்து ஒருவர் நிற்கிறாரே, அவரை இங்கே கூட்டி வருகிறாயா? அவருடன் நான் தனியே பேச வேண்டும்'' என்றாள்.

''நன்றாயிருக்குமாப்பா?'' என்று அனு யோசித்தாள். ''இத்தனை பேர் நடுவில் ஒருவரை நீ தனியே கூப்பிட்டுப் பேசினால், உன் சொந்தக்காரர்கள் ஏதாவது திட்டப் போகிறார்கள். உன்னைக் கட்டிப்பிடித்து ஒப்பாரியெல்லாம் வைக்க விடவில்லை என்று கும்மாவே எங்கள் மேல் கோபம்.''

அவர்கள் பேச்சைக் கவனித்துவிட்டு ''ஆமாம் மயூரி, சின்னப் பையன்கள், எங்களையே 'பொடிப் பசங்கள், மீசை அரும்பு முன்னே ஒட்டிக்கிட்டு நிற்கிறதைப் பாரு' என்கிறார்கள். எதற்கு வீண் வம்பு? அத்தோடு அவர் ஏற்பாட்டில்தான் இவ்வளவு நேரத்திலாவது பாடியை... சா... சாரி... மயூரி அங்கிள், ஆன்ட்டியை வீட்டுக்குக் கொண்டு வரமுடிந்ததாம்?'' என்றான் சுகன்.

பெரிய உதவியாமா? அவர்கள் வெறும் 'உடல்கள்' ஆனதே அவனால் அல்லவா?

தலையசைத்து ''இல்லை சுகன். அந்த ஆளுடன் நான் பேசியே ஆக வேண்டும். அப்பாவுக்கு... அந்த ஆள் இந்த வீட்டுக்குள் நின்றால் எனக்கு எனக்கு மூச்சு முட்டுகிறது. எப்படியாவது...'' என்று கண்களை இறுக மூடித்திறந்தாள் மயூரி.

அவசரமாகக் கலந்து ஆலோசித்து ''எல்லோருக்கும் சுக்குக் காப்பியோ என்னவோ கொடுத்தார்கள். அவருக்குக் கொடுக்கிற மாதிரி பக்கத்தில் போய்ப் பேச்சுக் கொடுத்து, இந்தப் பக்கம் கூட்டி வருகிறோம். வெளியே நாங்கள் கும்பலாக நின்றால் வேறு யாருக்கும் தெரியாது. எதற்கும் நீ சீக்கிரமாகப் பேசி அவரை அனுப்பிவிடு'' என்று திட்டமிட்டு அதன்படி மனுபரதனை அழைத்து வந்துவிட்டு வெளியே சென்று நின்றார்கள்.

''சாரிம்மா...'' என்று வருத்தம் தெரிவிக்கத் தொடங்கிய வனை மயூரி குரோதத்துடன் உறுத்து விழித்தாள்.

அவன் யோசனையாக நோக்கவும், ''என் பெற்றோரைக் கொன்ற கொலைகாரர் நீங்கள். உடனே இங்கிருந்து போய்விடுங்கள். இல்லாவிட்டால் நான் என்ன செய்யக் கூடும் என்று எனக்கே தெரியாது'' என்றாள் அடிக்குரலில்.

''பெற்றோரை இழந்த துக்கத்தில் நிலைதவறி, ஏதேதோ பேசுகிறாய் என்று தோன்றுகிறது. உண்மையில்...'' என்று இரகசிய குரலில் பேசியவாறு அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தான் மனுபரதன்.

''அங்கேயே நில்லுங்கள்'' என்றாள் அவள் ஆத்திரத்தில் குரல் நடுங்க. ''இதற்கு மேல் ஓர் அடி எடுத்து வைத்தால்... ஏன் இதற்கு மேல் ஒரு நிமிஷம் இந்த வீட்டில் இருந்தாலே கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொல்லுவேன். கொலைகாரப் பாவி. போ வெளியே!'' என்றாள் மூச்சு வாங்க.

''புரியாமல் பேசுகிறாய். ஆனால் இப்போது உன்னிடம் எதைச் சொல்லியும் பயன் இராது என்று தெரிகிறது. அதனால் போகிறேன். நீ அமைதியான பிறகு அப்புறமாகப் பார்க்க வருகிறேன்'' என்று கூறி வெளியேறினான் அவன்.

பதினைந்து நாட்கள், இவனைச் சந்தித்துப் பதினைந்தே தினங்கள், வாழ்வில் எல்லாவற்றையும் அவள் இழந்து விட்டாளே? பெற்றோர், பாதுகாப்பு, சுகம், சந்தோஷம், தன்மதிப்பு, தன்மானம்.

அவன் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றவளின் கண்களில் குற்றால அருவி இறங்கியது. விக்கலும், விசும்பலுமாக யாராலும் ஆற்றவோ, தேற்றவோ முடியாமல், அழுது தீர்த்தாள் மயூரி.

சுயம்புலிங்கத்திடம் சொத்து பத்து என்று ஒன்றுமில்லை என்று அறிந்ததும், கல் விழுந்த காக்கைக் கூட்டமாக உறவினர் கூட்டம் காணாமல் போயிற்று.

தனிமை வேண்டும் என்று சொல்லி நண்பர்கள் வரவை, அவளாகவே நிறுத்திவிட்டாள்.

ஏதேதோ 'கோர்ஸ்' எடுத்துப் படித்துக் கொண்டிருந்த வர்கள், அவர்களது படிப்பு வீணாகிறது என்பதோடு அவர்களை நேராக நிமிர்ந்து பார்த்துப் பேச அவளால் முடியவும் இல்லை.

மனுபரதனின் கைங்கர்யம் பழைய ஒளிவு மறைவற்ற நட்புக்கு இனி வழியுமில்லை.

ஆனால் தன்னுள் தானே முடங்கிக் கொள்வதற்காக அவள் தேடிய தனிமைக்கு வழியின்றி இன்னொரு கும்பல் வரத் தொடங்கியது.

'எனக்கு இவ்வளவு தர வேண்டும்' 'எனக்கு அவ்வளவு தர வேண்டும்' என்று ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரையிலான தொகையைச் சொல்லிக் கொண்டு தினமும் இரண்டு மூன்று பேராவது வரவும் மயூரி மிரண்டு போனாள்.

அவர்கள் சொன்னது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், கூட்டுத் தொகை ஐந்து லட்சத்தை நெருங்கி வந்தது.

அப்பாவுக்கு இவ்வளவு கடனா? என்று யோசிக்கும்போதே எல்லாம் மெய்யாக இருக்குமா, என்ற சந்தேகமும் உண்டாயிற்று.

மறுப்பதற்குச் சுயம்புலிங்கம் இல்லை என்ற தைரியத்தில் கிடைப்பது லாபம் என்று விட்டெறிந்த கல்லாகவும் இருக்கலாம் அல்லவா? விழுந்தால் பழம், விழாவிட்டாலும் நஷ்டம் வெறும் கல்தானே?

தந்தை பணம் தர வேண்டும் என்பதற்குச் சான்று கொண்டு வருமாறு கேட்டதுமே பாதிப் பேர் காணாமல் போயினர்.

கைமாற்றுக்கெல்லாம் கடன் பத்திரமா எழுதுவார்கள் என்று ஆத்திரப்பட்டவர்களும் உண்டு.

'சும்மா கொடும்மா' என்று மிரட்டியவர்களும் இருந்தார்கள்.

படித்துக் கொண்டிருந்த சின்னப் பெண்தானே. அதட்டினால் அரண்டு போவாள் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் அவள் இப்போது அறியாப் பெண் அல்ல, எவ்வளவோ முதிர்ந்து விட்டாள் என்பது அவர்களுக்கு எங்கே தெரியும்?

சரியான சான்றுடன் வந்தவர்களுக்குப் பணமாகவோ அன்றி கம்ப்யூட்டர், டி.வி., ஃபிரிட்ஜ் என்று வீட்டிலிருந்த

பொருளாகவோ கொடுத்து கடனைத் தீர்த்தவள், மற்றவர்களை சற்றும் தயக்கமின்றி விரட்டியடித்தாள்.

அப்படி மயூரி விரட்டியடித்தது, அவளிடம் அநியாயமாகப் பணம் பறிக்க முயன்றவர்களை மட்டுமல்ல, மனுபரதனையும்.

சுயம்புலிங்கம் இறந்த பிறகு, மனுபரதன் மூன்று தடவைகள் மயூரியின் வீட்டுக்கு வந்தான்.

முதல் இரு முறையும், வந்திருப்பது யார் என்று 'விசிட்டிங் கார்டு' மூலம் அறிந்த மயூரி, அவனைப் பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

வேறு வழியின்றித் திரும்பிச் சென்றவன், அடுத்து, அவள் இலக்கற்று வெறித்தபடி தனியே உட்கார்ந்திருந்த போது அறியாமலே, உள்ளே வந்து விட்டான்.

தரையில் அமர்ந்து, பெற்றோரைப் பற்றித்தான் மயூரி நினைத்துக் கொண்டிருந்தாள். 'சாங்கியங்கள் எதையுமே சரியாகச் செய்யவில்லை. உன் அம்மா, அப்பா ஆவிகள் விடுதலையில்லாமல் இங்கேயேதான் சுற்றிக் கொண்டிருக்கும்' என்று தாத்தா முறை உறவுக்காரர் ஒருவர் ஆடு வெட்டிப் படையல் போடாததற்காகக் குற்றம் சாட்டி, சபித்துவிட்டுப் போனது நினைவு வர அப்படி அப்பா, அம்மாவின் ஆவிகள் இங்கேயே இருந்தால், எங்கே உட்காருவார்கள்? சோஃபா கூட இல்லையே என்று உள்ளூர வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது அவளது மனம்.

அசட்டுத்தனமான வருத்தம்தான். ஆனால் அவர்களைப் பற்றி நினைப்பதே ஒரு சோகம் கலந்த சுகமாக இருக்க, அதிலேயே உழன்று கொண்டிருந்தது அவளது மனது.

'கால் வலிக்கிறதா? சாரிப்பா, சாரிம்மா சோஃபாவை விற்று விட்டேன். முப்பதாயிரத்துக்கு நீங்கள் வாங்கிய சோஃபா பத்தாயிரம் ரூபாய்க் கடனைத் தீர்ப்பதற்காகக் கொடுத்து விட்டேன்...' என்று மனதால் பேசிக் கொண்டிருந்தவள் நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

மனுபரதனைக் கண்டதும், முகம் கடுத்து, ''உங்களை யார் உள்ளே விட்டது?'' என்றாள் ஆத்திரத்துடன்.

''உன்னுடைய விருந்தோம்பல் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும். ஆனாலும் குறைந்த பட்சமாக என்ன விஷயமாக வந்தேன் என்று கேட்கலாம் அல்லவா?'' என்றான் மனுபரதன்.

''அனாவசியம். எப்படி உள்ளே வந்தீர்கள்? யார் உங்களை வரவிட்டது?'' என்றாள் அவள் கோபமாகவே.

''யாருமில்லை. வாசலில் யாருமே இல்லை. உள்ளே போய்க் கேட்டுக் கொள்ளலாம் என்று வந்தேன்'' என்றான் அவன்.

குத்தலான ஒரு பதிலை அவன் எதிர்பார்த்தபோது அவள் வேறு சொன்னாள். ''ஆமாம் வாசலில் யாரும் இருந்திருக்க மாட்டார்கள். சிக்கனம் பார்க்க வேண்டிய நிலை. சம்பளம் கொடுக்க முடியாதே என்று தேவுவை வேலையை விட்டு நிறுத்திவிட்டேன்'' என்று ஒரு குரூரப் பாவனையுடன் விளக்கினாள். ''இன்னும் இரண்டு வேலையாட்களையும் அப்புறம் சோஃபாக்களையும் விற்றுவிட்டேன். அதனால், முறைப்படி, உங்களை உட்காரச் சொல்லி விருந்தோம்ப, என்னால் முடியாதே'' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

தந்தை இல்லாததால் அவளுக்கு எவ்வளவு கஷ்டம் என்பதைச் சொன்னால் அவரது மரணத்துக்குக் காரணமாக இருந்தவனுக்கு உறுத்தும் என்று எண்ணினாள் போலும்.

ஆனால் சர்வ சாதாரணமாக அவள் முன்னே தரையில் சம்மனமிட்டு அமர்ந்து கொண்டு '''சுயம்புலிங்கத்தின் பொருளாதார நிலை 'அவ்வளவு மோசமானதாகவா இருந்தது?'' என்று கரிசனமாகக் கேட்டான் அவன். ''சொல்லப்போனால் அது பற்றிப் பேசத்தான் நான் இத்தனை முறை இங்கு வந்தேன்.''

'நீ அதை என்னவென்று கேட்காமலே விரட்டினாயே' என்ற குற்றச்சாட்டு தொக்கி நின்றது. ''எங்கள் வீட்டுப் பொருளாதாரம், அது பற்றி மற்றவர்கள் பேச என்ன இருக்கிறது?''

அதைப் பற்றிப் பேசுவதற்கு உனக்கு உரிமையில்லை என்று அவளும் மறைமுகமாகவே கூறினாள்.

''மற்றவர்கள்... சாதாரணமான சமயங்களில் குடும்பத்தினர் தவிர மற்றவர்கள் அது பற்றிப் பேசுவது அநாகரீகம்தான். ஆனால் அன்புக்குரியவர்களை இழந்து நிலை குலைந்து நிற்கும் அறியாப் பெண் எதிலும், ஏமாந்துவிடக் கூடாதே என்று எச்சரிப்பது மனிதத் தன்மை. ஏனெனில் அப்படி ஏமாற்றவும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்'' என்றான் அவன்.

இதை இவன் சொல்வதா? அன்புக்குரியவர்களை முன் நிறுத்தி மனதை நிலை குலையவைத்து அவளை முழுக்க முழுக்க நாசமாக்கியவன்.

''பாம்பின் கால் பாம்பறியும்'' என்றாள் மயூரி குத்தலாக.

''அப்படியென்றால் அர்த்தம் புரியவில்லையே? நான் எப்போது யாரை ஏமாற்றினேன்?''

நல்ல கேள்விதான். அவன் ஏமாற்றவில்லையே? ஒளித்து மறைத்து எதையும் அவன் செய்யவைக்கவில்லையே? கண்ணைத் திறந்து கொண்டுதானே கிணற்றில் குதிக்க வைத்தான்.

சோர்வுடன் அவள் கண்களை மூடித் திறக்கவும், "போகட்டும். அது பற்றி உன்னோடு வாதாட நான் இங்கே வரவில்லை. ஒரு குடும்பத் தலைவர் இப்படித் திடுமென இறந்துவிட்டால் 'எனக்குப் பணம் தர வேண்டும். கைமாற்று வாங்கினார். மூன் பணம் வாங்கினார். அது இது' என்று சொல்லிக் கொண்டு புற்றீசல் போல பலர் வருவார்கள். தந்த சான்று இல்லாமல் யாருக்கும் பணம் கொடுத்துவிடவேண்டாம் என்று எச்சரிக்கத்தான் வந்தேன். வீட்டைப் பார்த்தால் எச்சரிக்கைக்கு உரிய காலம் கடந்து விட்டது போலத் தோன்றுகிறதே" என்றான் அவன் இரங்கிய குரலில்.

இந்த எச்சரிக்கை அப்போதே கிடைத்திருந்தால் 'ஐயோ கடனா' என்று கலங்கி முதலில் கொடுத்துவிட்ட ஓர் இருபதாயிரம் மிஞ்சியிருக்கக் கூடும். 'இவ்வளவு கடனா' என்று கலங்கும்படியும் நேர்ந்திராது. இவன் மீதுள்ள வெறுப்பில் பார்க்க மறுத்து அவளே இழுத்துக் கொண்டது.

ஆனால் இவ்வளவுக்குப் பிறகு இவனை வரவேற்றுப் பேசி இவன் உதவியை ஏற்பதும் கேவலம்தான். அதைவிட இருபதாயிரம் தொலைத்தது ஒன்றும் பெரிதில்லை.

அத்தோடு இந்த இருபதாயிரம் எத்தனை காலம் அவளைக் காப்பாற்றிவிடப் போகிறது?

"அப்படி ஒன்றும் விட்டுவிடவில்லை" என்று மற்ற பணம் பட்டுவாடா செய்தது பற்றி சிறு நிமிர்வுடனேயே அவனிடம் சொன்னாள்.

"யோசித்து செயல்பட்டிருக்கிறாய். கெட்டிக்காரிதான்" என்று பாராட்டினான் மனுபரதன்.

அவனது பாராட்டுதலும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனோடு அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதே

பெற்றோருக்குச் செய்யும் துரோகமாகத் தோன்றியது. எனவே, "வேறு ஒன்றும் இல்லையென்றால் கிளம்புகிறீர்களா? தயவு பண்ணி என்னோடு இனித் தொடர்பு கொள்ளவும் வேண்டாம்" என்று தரையைப் பார்த்தபடி மரத்த குரலில் கூறினாள்.

சிறு முறுவலுடன் விசித்திரமாக நோக்கி "இரண்டாவது தடவை" என்றான் மனுபரதன்.

ஆனாலும் உடனே எழுந்துவிட்டான். "உன் விருப்பம் கிளம்புகிறேன். ஆனால் ஏதாவது உதவி தேவைப்பட்டால் அது எந்தத் தேவை என்றாலும் தயக்கமின்றிக் கேட்கலாம். அதை மட்டும் நினைவு வைத்துக் கொள். வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான் அவன்.

'உன்னிடம் உதவி கேட்பதா? அதைவிட மானத்தோடு செத்துப் போகலாம்' என்று எண்ணினாள் மயூரி.

அவனோடு இரண்டு நாட்களைக் கழித்த எல்லோரிடமும் இப்படியே சொல்வானா?

அல்லது அவளோடு களித்த விதம், அதிகச் சுகமாக இருந்ததா?

முகம் கசங்க, அன்று போலவே மீண்டும் கண்ணீரில் கரைந்தாள் அவள்.

வெகு நேரம் அழுது, ஓய்ந்து கிடந்தபோது மனுபரதனைப் பார்த்தாலே இவ்வளவு தூரம் மனம் ஒடிந்து போவானேன் என்று ஓர் எண்ணம் தோன்றியது.

அவன் முன்னே நிமிர்ந்து காட்ட வேண்டும் என்று பலவீனமான குரலில் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அந்த வீட்டில் மயூரி அதிக நாட்கள் கிடந்து உழலும் படியாக நேரவில்லை.

ஒரு காரணம் அடுத்த மாதம் வீட்டைக் காலி பண்ணுவதாகச் சொல்லி வீட்டுக்குக் கொடுத்திருந்த முன் பணத்தை வாங்கி ஒரு கடனைத் திருப்பிக் கொடுத்தாள். எனவே வீட்டைக் காலி செய்து அங்கிருந்து வெளியேறியாக வேண்டிய சூழ்நிலை.

வெளியேறி வயிற்றுப் பாட்டுக்கு, ஏதாவது வேலை தேடியாக வேண்டிய கட்டாயமும்கூட. கடைசியாகக் கையிலிருந்த சில ஆயிரங்கள், தவிர, எல்ஐசி பணம் உட்பட எல்லாமே காற்றிலிட்ட கற்பூரமாய், கடனுக்கே கரைந்துபோய் விட்ட நிலை அல்லவா?

வீட்டிலிருந்த அலங்காரப் பொருட்கள், பாத்திரம் பண்டங்களையெல்லாம் எங்கே தூக்கிக் கொண்டு போவது? சமையல்காரி, பால்காரன் போன்றவர்களுக்குச் சிலதைச் சும்மாவே கொடுத்தாள். மற்றதை கால்விலைக்கேனும் விற்று முடிக்க முயன்றாள்.

அடுத்த காரணம், கருணை இல்லத்தின் தலைவர் தில்லை நாயகம்.

திருச்சியை அடுத்து ஆதரவற்ற அனாதைகளுக்காக, ஒரு பெரிய இல்லத்தை நடத்திக் கொண்டிருப்பவர் அவர்.

மயூரியின் வீட்டுப் பழைய துணிகளையெல்லாம் இவரது இல்லத்துக்குத்தான் கொடுப்பது. ஆண்டுக்கு ஒரு தரம் மயூரியின் பிறந்த நாளின் போது, குடும்பத்தோடு அந்த இல்லத்துக்குச் சென்று, துணிகளைக் கொடுத்துவிட்டு, அன்றைய உணவுச் செலவை ஏற்று கூடவே அமர்ந்து உணவருந்திவிட்டு வருவார்கள்.

அப்போதெல்லாம் அந்த இல்லமே, தனக்கு ஒரு நாள் புகலிடமாகக் கூடும் என்று மயூரி கனவில் கூடக் கருதியதில்லை.

ஆனால் மனுபரதன் வந்துவிட்டுப் போனதற்கு மறுநாள், தில்லைநாயகம், அவளது வீட்டுக்கு வந்தார். ''மெலிந்து விட்டாயேம்மா'' என்று வருந்தியவர் அவளைத் தன்னோடு வரும்படி அழைத்தார்.

திகைத்து நோக்கிய பெண்ணிடம் தனக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் மகளைப் பார்த்துக் கொள்ளுமாறு ஏற்கனவே சுயம்புலிங்கம் கூறியிருப்பதாகச் சொன்னார் அவர்.

தந்தை தற்கொலை செய்து கொண்டார் என்பதற்கு, இதைவிட வேறு என்ன சான்று தேவை?

பெற்றவர்களைக் கொன்றுவிட்டு மகளுக்கு உதவி செய்யத் துடிக்கிறானாக்கும். பாவி. இவனை என்ன செய்யலாம்? எந்த வழியில் நோகடிக்கலாம்.

கத்தியை எடுத்துப்போய் அவன் அமர்ந்திருக்கும் நேரத்தில் குத்திக் காயப்படுத்துவதைத் தவிர வேறு எந்த வகையிலும் அவனை வருத்த அவளால் முடியாது. அந்த முயற்சி கூட வெற்றி பெறும் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. சமயத்தில் விழிப்புற்று அவளது முயற்சியை அவன் முறியடித்து விடவும் கூடும். அப்புறம் அதைச் சும்மா விடுவதற்காக இன்னொரு விலை கேட்டாலும் கேட்பான்.

ஆனால் இப்படி ஓர் அக்கிரமக்காரனைச் சும்மா விடுவதா? என்ன அநியாயம்?

தன் கையாலாகாத்தனத்தை எண்ணி மயூரிக்குத் தன்மீதே கோபம் வந்தது.

''என்னம்மா மயூரி, உடனே வரவில்லை என்று உனக்கு என்மீது கோபமா? கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தது. அதனால், வாத் தாமதம் ஆகிவிட்டது. அல்லது நம்

இல்லத்துக்கு வரவே உனக்குப் பிடிக்கவில்லையா? உணவு, உடை, எல்லாமே எளிமையாகத்தான் இருக்கும் ஆனாலும்....''

''எளிமை பற்றி ஒன்றுமில்லையே அங்கிள். அத்தோடு உங்கள் மேலும் நான் எப்படிக் கோப்படுவேன்? ஏன் இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்?'' என்று புரியாமல் வினவினாள் மயூரி.

''பின்னே முகத்தை இப்படிக் கோபமாக வைத்துக் கொண்டிருக்கிறாயேம்மா.''

மனுபரதனைப் பற்றி அவள் நினைத்ததைக் கோபமே அறியாத இந்தப் பெரியவரிடம் சொல்லமுடியுமா? அன்றி அந்தக் கேவலமான கதையைத்தான் கண்ணியமே உருவான இவரிடம் சொல்ல இயலுமா?

எதற்கும் வழியின்றி ''அது... அது அப்பாவுக்குத் தொல்லை கொடுத்த ஒருவரைப் பற்றிய நினைவு வந்தது. அத்தோடு எந்த வகையில் நீங்கள் எனக்கு இல்லத்தில் இடம் கொடுக்க முடியும்? நான் ஒன்றும் சின்னக் குழந்தையோ மிகவும் கிழவியோ அல்லவே? சும்மா வந்து, அடைக்கலம் கேட்டுச் சேர்ந்து கொள்ள முடியாதே, என்று அந்த யோசனை வேறு'' என்று எப்படியோ சமாளித்தாள் அவள்.

அது ஒன்றும் பிரச்சனை அல்ல, அம்மா? இல்லத்தில் வேலைகளுக்கா பஞ்சம்? உதவிக்கு எத்தனை பேர் வந்தாலும் அங்கே தேவைதானே? ஆண்டுதோறும் வரும்போது, நீயும்தான் என்றைக்குச் சும்மா உட்கார்ந்திருந்தாய்? அப்போது உதவியாய்ச் செய்ததை, இப்போது வயிற்றுப்பாடாய் செய்யப்போகிறாய். அதை நினைத்தால் உனக்கு மனம் கொஞ்சம் கூசத்தான் செய்யும். ஆனால் சமாளித்துக் கொண்டு யதார்த்தத்தில் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் மகளே'' என்றார் அவர் கனிவுடன்.

பெற்றோர் நினைவில் வருந்துவதும், மனுபரதனை வெறுப்பதுமாக அதிலேயே உழன்று கொண்டிருந்தவள், இந்த விதமாக, இதுவரையிலும் எண்ணிப் பார்க்கவே இல்லை. எண்ணிப் பார்த்த இப்போதுமே அவளுக்கு எந்த விதமான அவமானமும் தோன்றவில்லை.

உண்மையான உழைப்பில், கூச்சப்பட என்ன இருக்கிறது?

இதுவே அன்று போல விலை கொடுப்பதானால் குன்றிக் குறுகுதல் அவசியம்தான்.

மறுபடியும் மனதில் இருப்பதைச் சொல்ல மாட்டாமல், ''உழைப்பில் வெட்கப்பட என்ன இருக்கிறது அங்கிள்? இங்கே இன்னும் ஒதுக்க வேண்டியிருக்கிறது. இங்கே இருப்பதில் இல்லத்துக்கு ஏதாவது பயன்படும் என்றால் சொல்லுங்கள். தனியாக எடுத்து வைத்து விடுகிறேன். மற்றதையெல்லாம் விலைக்கோ, சும்மாவோ கொடுத்து வீட்டைக் காலி பண்ணிக் கொடுத்துவிட்டுத்தான் வரவேண்டும். அந்த வேலை முடிந்ததும், வந்து விடுகிறேன்'' என்றபோது பெற்றோர் நினைவில் சட்டென அவளுக்குக் கண் கலங்கியது.

எப்படிப் பார்த்துப் பார்த்து எத்தனை பொருட்களை வாங்கி இடம் பார்த்து வைத்து இந்த வீட்டை அலங்கரித்தார்கள். எல்லாம் வீண் வெறும் குப்பைக்குச் சமமாகிவிட்டதே?

ஆறுதலாக அவள் தலையை வருடிக் கொடுத்தார் பெரியவர்.

பெரியவர் தில்லைநாயகம் குறிப்பிட்ட பொருட்களோடு அவளுடைய பெற்றோரின் சாதாரணத் துணிமணிகள் மற்றும் ஆசிரமத்துக்கு உதவக் கூடும் என்று அவளுக்குத் தோன்றியவை தவிர்த்து, மற்றவற்றையும் ஒரு வழியாகத் தலை

முழுகிவிட்டு தில்லைநாயகம் நடத்திவந்த இல்லத்தை அவள் அடைந்தபோது சுயம்புலிங்கம் தம்பதி மறைந்து மூன்று மாதங்களுக்கும் மேலாகவே ஆகிவிட்டிருந்தன.

எலும்பும், தோலுமாக, மெலிந்து வந்ததோடன்றி, உணவை அவள் வெகுவாக வெறுத்து ஒதுக்கவும், பெரியவர் மயூரியை மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் சென்றார்.

''என்னவோ, சாப்பிடவே பிடிக்கவில்லை. அங்கிள் அம்மா அப்பா நினைவில் சாப்பாட்டைப் பார்த்தாலே வாந்தி வருகிற மாதிரி இருக்கிறது. தானாகச் சரியாகி விடும் என்று நினைத்தால் ஆகவே இல்லை. சாப்பிடாததால் சோர்வு வேறு. பசிக்கு ஏதாவது மருந்து தந்தார் என்றால் நல்லது. அப்போதுதான் வேலை செய்ய முடியும்'' என்று அவளும் மறுக்காமல் கூடச் சென்றாள்.

ஆனால் அவள் கருவுற்றிருப்பதாக வைத்தியர் கூறவும், அந்தச் செய்தி விளைத்த அதிர்ச்சியில் மயூரி மயங்கி விழுந்தாள்.

8

தில்லைநாயகத்துக்கோ, அந்த வைத்தியருக்கோ, இந்த மாதிரி நிலைமைகள் புதிது அல்ல.

இல்லத்தைப் புகலடைந்த பலருள், அறியாமையாலும், கட்டாயத்தாலும் தாயானவர்களும் உண்டு.

எத்தனையோ, விதமான சோகக் கதைகளை அறிந்திருந்த அவர்கள் இருவரும் அவள் விஷயத்தில் அதிர்ச்சியுறவும் இல்லை. அவளை வெறுத்து நோக்கவுமில்லை.

இவள் விஷயததில் என்ன ஆனதோ, பாவம் என்ற பரிதாபம்தான்.

ஆனால் இப்படியொரு நிலையைச் சற்றும் எதிர்பார்த்திராத மயூரிதான் வெகுவாக அதிர்ந்து போனாள். மயக்கம் வரும் அளவுக்கு அதிர்ச்சி.

மயக்கம் தெளிந்த பின்னரும் தில்லைநாயகத்தையோ, மருத்துவரையோ நிமிர்ந்து பார்க்க முடியாமல், கூனிக் குறுகிப் போனாள் அவள்.

என்ன மடத்தனம்? அவள் ஏன் இதை எதிர்பார்க்க வில்லை?

வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை அறியாத முட்டாள் அல்லவே அவள்?

அதைத்தான் பள்ளியிலேயே விளக்கிச் சொல்லி விடுகிறார்களே?

அப்படியிருந்தும், ஒரு நிர்மூடத்தைப்போல் சற்றும் யோசியாமல் எப்படி இருந்தாள்?

பெற்றோருக்காகத் தியாகம் செய்வதாக எண்ணிக் கொண்டு மனுபரதனின் நிபந்தனைக்கு இணங்கியது ஒரு மடத்தனம் என்றால், அதனால் இப்படி ஏதும் ஆகியிருக்குமோ என்று யோசித்து, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்தது எவ்வளவு பெரிய மூடத்தனம்.

இந்த அழகில் தான் ஒரு புத்திசாலி என்ற எண்ணம் வேறு அவளுக்கு.

இனி அடுத்தவர் முகத்தை எப்படி நிமிர்ந்து பார்ப்பது?

முக்கியமாக அவளுடைய குடும்பத்தின் மீது எவ்வளவோ, மதிப்பு வைத்திருக்கும் தில்லைநாயகம் அங்கிளின் முகத்தைப் பார்த்துப் பேச முடியுமா?

அப்படியே பூமிக்குள் புதைந்து போய்விட மாட்டோமா என்று அவள் தவித்துக் கொண்டிருந்த போது ஒரு கரம் அவளது தலையை மெல்ல வருடியது.

தில்லைநாயகம்தான்.

கண்ணீரை அடக்க முடியாமல் அவள் தத்தளித்தபோது "வாம்மா நம் இல்லத்துக்குப் போவோம்" என்று கனிவுடன் அழைத்தார் அவர்.

மௌனமாகச் சற்று நேரம் கண்ணீர் சிந்திவிட்டு, "நான் தப்பு பண்ணி இப்படியாகிவிட்டது என்று எண்ணுகிறீர்களா அங்கிள்?" விசும்பலை அடக்கிக் கொண்டு கேட்டாள் மயூரி.

தட்டிக் கொடுத்தார் அவர், "இல்லையம்மா, நீ அப்படிப்பட்ட பெண் அல்ல என்று எனக்குத் தெரியாதா? என்ன நிலையில் இப்படி ஆயிற்றோ என்று நினைத்தேன்" என்று அவர் சொல்லி முடிக்குமுன் மளமளவென்று கண்ணீர் விட்டாள் அவள்.

விரைவிலேயே சமாளித்துக் கொண்டு "எனக்கு இது வேண்டாம் அங்கிள்" என்றாள் மயூரி.

"மயூரி."

"ஆமாம் அங்கிள் இது... இப்படிப்பட்ட ஒன்று. இந்த உலகத்தில் பிறக்கக்கூடாது அங்கிள். அதனால் இதை அழித்துவிட ஏற்பாடு செய்யும்படி டாக்டரிடம் சொல்லுங்கள் அங்கிள்" என்று அவசரமாகப் பேசினாள் அவள்.

அவளைத் தட்டி கொடுத்துக் கொண்டிருந்த கை சட்டென்று நின்றது.

"அதை நாம் இல்லத்துக்குப்போய்ப் பேசி முடிவு செய்வோமே" என்றார் அவர்.

"இல்லை" என்று அழுத்தமாகத் தலையசைத்து மறுத்தாள் மயூரி, "இல்லை அங்கிள் இதை இப்போதே அழித்துவிட வேண்டும். அவசியத்துக்கு அதிகமாக ஒரு கணம் கூட இதைச் சுமக்க எனக்கு விருப்பமில்லை. இப்போதே எனக்குள் தீ எரிகிற மாதிரி இருக்கிறது. அங்கிள் தயவு பண்ணி டாக்டரிடம் சொல்லுங்கள், அங்கிள், ப்ளீஸ்" என்று தவிப்புடன் கெஞ்சினாள் மயூரி.

குறுக்கும் நெடுக்குமாகச் சில தரம் நடந்துவிட்டு, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு தில்லைநாயகம் அவள் எதிரே அமர்ந்தார்.

கவலையும் பயமுமாகக் கண்களில் உயிரைத் தேக்கி வைத்துக் கொண்டு அவள் நோக்க, அவர் சொன்னார் "மயூரி சின்னப் பெண் என்றாலும் நீ புத்திசாலி என்று உன் தந்தையும் நானும் பேசிக் கொள்வோம். நம் இல்லத்தின் கொள்கை என்னவென்று உனக்குத் தெரியுமல்லவா? உயிர்களிடம் அன்பும் கருணையும். அந்த இரு தன்மைகளோடு உயிர்க் கொலை எப்படிப் பொருந்தும்? யோசித்துப் பார்."

கண்கள் அலக "அங்கிள் நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? இதை, நான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றா சொல்லுகிறீர்கள்? என்னால் யாரையும் தலை நிமிர்ந்து பார்க்கவே முடியாது அங்கிள்" என்று பதறினாள் மயூரி.

"நீ எல்லோரையும் தலை நிமிர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக ஓர் உயிரைக் கொல்வது கூடாது மயூரி" என்றார் அவர், சற்று கண்டிப்பான குரலில்.

திகைத்து நோக்கிவிட்டு, "அப்படியில்லை, அங்கிள், நான் என் கௌரவத்துக்காக மட்டும் பார்க்கவில்லை..." என்று தன்னை விளக்க முயன்றாள் மயூரி.

ஆனால் தந்தையின் தப்பை வெளிப்படுத்தாமல் மனுபரதனை மட்டுமாக எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? ஆனால் இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்வது பற்றி அவளால் எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை. முதலாவதாக, அது அவளுடைய பெற்றோருக்குச் செய்யும் துரோகம் அல்லவா?

சற்றுத் தவித்துவிட்டு "அங்கிள் இதை நான் உங்களுக்கு எப்படி விளக்கட்டும்? இது ஓர் அயோக்கியனுடைய வித்து அங்கிள். அவன் நல்லவன் அல்ல, அங்கிள்! அங்கிள்..." என்று என்னவென்று தெளிவாகச் சொல்ல முடியாமல் மயூரி திணறினாள்.

"இங்கே பிறந்த எத்தனையோ குழந்தைகளுடைய தந்தைமார் கெட்டவர்களாகத்தான் காண்கிறது மயூரி. அதற்காக ஒரு பாவமும் அறியாத குழந்தையை நாம் வெறுக்க முடியுமா?" என்று கேட்டார் தில்லைநாயகம்.

"ஆனால் இதைச் சுமப்பதற்கு நான் என்ன பாவம் செய்தேன் அங்கிள்? அவன் என்னை ஒரு நிர்ப்பந்தத்தில் நிறுத்தி... ஐயோ! இதைக் குழந்தையாக என்னால் எப்படி ஏற்க முடியும் அங்கிள் இது, என்னுள் இருக்கிறது என்று நினைக்கும்போதே எனக்கு எரிகிறதே. என்னால் முடியாது அங்கிள்! அதைவிட என்னைக் கொன்று விடுங்கள். கொன்று விடுங்கள்!" என்று மயூரி கதறத் தொடங்கவும் தில்லைநாயகம் திகைத்தார்.

அவர் மருத்துவரை அழைக்க இருவருமாக ஏதோ பேசிக் கொண்டனர்.

பிறகு தில்லைநாயகம், மயூரியிடம் வந்தார். "பாரம்மா, நீ கேட்டது பற்றி டாக்டரிடம் பேசினேன். முதலில் இல்லத்து

விதிமுறைகளைப் படித்துப் பார்த்துவிட்டு, மேற்கொண்டு எதுவானாலும் செய்யலாம் என்கிறார் அவர். வா நீயும் படித்த பெண்தானே? என்னென்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கலாம் வா" என்று அழைத்தார்.

"அதில் என்ன எழுதியிருந்தாலும் இது என்னால் முடியாது அங்கிள்" என்றாள் அவள் காற்றாகிவிட்ட, ஆனால் பிடிவாதமான குரலில்.

"முதலில் அதைப்படித்துப் பார்த்துவிட்டு முடிவு செய்யலாம் வா" என்று அவளை அழைத்துச் சென்றார் அவர்.

"முடிவு ஒன்றுதான்" என்றபடி உடன் நடந்தவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது.

"இது உங்கள் ஆசிரமம்தானே அங்கிள். விதி முறைகளும், நீங்கள் அமைத்தவைதானே?" என்று கேட்டாள். "அமைத்தவருக்கு அதில் தப்பு இருந்தால் மாற்ற உரிமை இல்லையா?"

லேசாக முறுவலித்தார் அவர். "நீ எங்கே வருகிறாய் என்று தெரிகிறது. ஆனால் ஒவ்வொரு தனி மனிதர்களுக்காகவும் சட்ட திட்டங்களை மாற்றி அமைத்துக் கொண்டே இருந்தால் அப்புறம் சட்டம் என்பதே கேலிக் கூத்தாகி விடாதா? அத்தோடு இந்த இல்லத்தைத் தொடங்கியவர் ஒரு பெண்மணி. வாழ்வில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானவர். நிறைய நன்கொடைகளின் மூலமாகத்தான் இந்த இல்லம் அப்போது நடந்தது. நன்கொடை கொடுக்க வந்தபோது இதன் உயர்ந்த நோக்கத்தால் ஈர்க்கப்பட்டு, நான் என் சொத்தோடு என்னை இதில் இணைத்துக் கொண்டேன். நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்தது. உனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உன் தந்தையே நீ பிறந்தபின் இந்த இருபது ஆண்டுகளாகத்தானே

பழக்கம். அப்போது அந்த அம்மா நிர்ணயித்த நெறிமுறை களைத்தான் மயூரி நாங்கள் இதுவரையிலும் கடைப்பிடித்து வருகிறோம்'' என்று விரிவாக விளக்கம் கூறினார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால்.

இல்லத்தின் விதி முறைகள் எப்படி இருக்கக்கூடும் என்று மயூரியால் ஓரளவு கணிக்க முடிந்தது. நிச்சயமாக அவளுக்குப் பாதகமாகத்தான் இருக்கும்.

ஆனால் காலம் மாறிவிடவில்லையா? அப்போதுள்ள கோட்பாடுகளா இப்போது இருக்கின்றன?

ஒன்பது மீட்டர் சேலையைச் சுற்றிக் கட்டி தோளை மூடிக் கொண்டு இருந்தார்கள். இப்போது அப்படியா? ஐந்தரை மீட்டர் சேலையாகி அதுவும் போய் இப்போது சுரிதார் செட்டே சர்வ சாதாரணமாகிவிடவில்லையா?

விதிமுறை அது இது எனும்போது அங்கிளிடம் எடுத்துச் சொல்லவேண்டும் என்று மயூரி தன் வாதங்களை வரிசைப் படுத்திக் கொண்டாள்.

ஆனால் எந்த ஒரு வாதத்தையும் தில்லைநாயகம் ஒத்துக் கொள்வதாக இல்லை.

'கடவுள் படைத்த உயிரைக் காத்து ரட்சிப்பதுதான் நம் லட்சியம் என்று கொள்ள வேண்டும்' என்று இல்லத்து விதிகளில் எழுதி வைத்திருந்தது.

இந்தப் பகுதியை எடுத்துக்காட்டி, ''இதை ஒரு விதியாக வைத்திருப்பதன் காரணத்தையும் அந்த அம்மா எழுதி யிருக்கிறார்கள் பார். மனித உயிரின் மதிப்பே, மனிதனுக்குப் புரியவில்லையாம். தன் முயற்சியால் ஓர் உயிரை உண்டாக்க முடியாத நாம், அதைப் பாதுகாப்பதிலேனும் முழுக்க கவனம்

செலுத்த வேண்டும் என்கிறார்கள். என்னால் இதை மீற முடியாதும்மா'' என்று வருத்தத்துடன் ஆனால் உறுதியாக மறுதலித்தார் தில்லைநாயகம்.

அவர் மனதை மாற்றுவது லேசில் முடியாத காரியம் என்று உணர்ந்த மயூரி வேறு விதமாக முயன்றாள். ''இதைப் பெற்றுத்தான் ஆக வேண்டும் என்றால் எனக்கு வாழவே பிடிக்கவில்லை'' என்று உண்ணாவிரதம் இருந்தாள்.

சும்மாவே உண்ணப் பிடிக்காத நிலை. எனவே அவளுக்கு அதிகச் சிரமமாகவும் இல்லை.

இளகிய உள்ளம் படைத்த தில்லைநாயகம் கடைசியாக இறங்கி வந்தார்.

ஆனால் அந்த அன்பு ஆசிரமத்தில் அதன் ஓர் அங்கமாக இருக்கும் ஒருத்தி உயிர்க்கொலை புரிவதை அவரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. ''அதை நான் அனுமதிக்க முடியாதம்மா. ஆனால் உனக்கு வெளியே ஒரு வேலை வாங்கித் தருகிறேன். இங்கிருந்து வெளியேறிப்போய் அப்புறமாக என்ன வேண்டுமானாலும் செய்துகொள்'' என்றார் அவர்.

மயூரியும் ஒத்துக் கொண்டாள். இல்லத்தின் பாதுகாப்பை விட்டு வெளியேறுவது சற்றுக் கலக்கத்தை அளித்த போதிலும், வயிற்றுச் சுமையை இறக்குவது முக்கியமாகத் தோன்றவே மறு பேச்சின்றி தில்லைநாயகத்தின் திட்டத்தை ஏற்றுக் கொண்டாள்.

அப்படித் தில்லைநாயகம் அவளுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தது, இல்லத்துக்கு அவ்வப்போது நன்கொடை அளிக்கும், ஒரு பெரிய பெண் மருத்துவரின் வீட்டில் வீட்டு வேலைதான். ஆனால் மயூரியின் பழைய வாழ்க்கையை பற்றித் தில்லைநாயகம் தெரிவித்துப் பரிந்துரையும்

செய்திருந்ததால், மற்றவர் வேலையை மேற்பார்வையிடும் பொறுப்பை அவளுக்குக் கொடுத்தார்கள்.

சம்மா என்றால் எப்படியோ? தில்லைநாயகத்தின் மீதுள்ள மதிப்பில் அந்த வீட்டில் மயூரியை நல்லபடியாகவே நடத்தினார்கள் எனலாம்.

வீட்டுப் பெண் தாமரைக்கு, ஒத்த வயதினளான மயூரியைப் பிடித்துப் போனதும், அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். எப்படியோ வேலையைப் பொறுத்தவரையில் மயூரி நிம்மதியாக இருக்க முடிந்தது.

ஆனால், மயூரியின் அடுத்த அதிர்ச்சி அவளைப் பரிசோதனை செய்துவிட்டு தாமரையுடைய தாயான அந்தப் பெண் மருத்துவர் சொன்னது.

குழந்தைப் பேறு மற்றும் பெண்களின் பிரச்சினைகளைக் குணப்படுத்துகிறவர், சாந்திமதி. கருக்கலைப்பும், அவற்றுள் அடக்கமே. முடிந்தவரை தடுத்துப் பார்ப்பார். ஆனால் பிடிவாதமாக இருந்தால் அவரே செய்து அனுப்புவார்.

''ஒரேயடியாக மறுத்தோம் என்றால் யாராவது அரைகுறை யிடம் சென்று கண்ட நோயை இழுத்துக் கொள்வதோடு உயிருக்கும் அபாயத்தைத் தேடிக் கொள்கிறார்கள். அதனால் நானே இந்தப் பாவத்தையும் சுமந்து கொள்கிறேன்'' என்பார்.

'பாவம்' என்று நினைத்ததினாலேயே அதன் மூலம் வரும் பணத்தை மட்டும் பைசா விடாமல் கணக்கிட்டு நன்கொடையாகக் கொடுத்து விடுவார்.

பக்கத்திலேயே கருணை இல்லம் இருந்தது அவருக்கு வசதியாக இருந்தது.

அந்த அறிமுகத்தால்தான் தில்லைநாயகம் மயூரியை சாந்திமதியிடம் அனுப்பியதும் சாந்திமதி அவளை ஏற்றுக் கொண்டதும்.

மயூரியின் தேவையை அறிந்ததும், வழக்கம்போலவே அறிவுரை கூறிவிட்டு அது பயனில்லை என்று கண்டதும் அவளைப் பரிசோதித்தவர் கையை விரித்தார்.

''என்னம்மா இவ்வளவு நாள் தள்ளி வந்திருக்கிறாயே? குழந்தை உருவாகியே நாலு மாதங்கள் முடிந்திருக்கும் போலத் தோன்றுகிறதே. இனி ஒன்றும் செய்ய முடியாதே'' என்றார்.

இடிந்து போனாள் மயூரி.

எப்படி முடியாமல் போகும்?

தவிப்புடன் யோசித்தவளுக்குச் சட்டென ஒன்று நினைவு வர, நம்பிக்கையோடு அவசரமாக டாக்டரிடம் திரும்பினாள்.

9

மயூரியுடன் படித்தவர்களில் சிறு வயதிலேயே மணமான பெண் ஒருத்தி உண்டு. சொந்தத் தாய் மாமனையே மணந்திருந்தாள். கல்யாணமானதும் கருவுற்றுவிட்டாள்.

குழந்தை ஆறு மாதக்கரு ஆன பிறகு 'ஸ்கேன்' எடுத்த போது அது சரியாக வளரவில்லை. பெரும் குறையிருக்கிறது என்று கண்டுபிடித்து உடனே அகற்றி விட்டார்கள்.

நெருங்கிய உறவில் திருமணம் செய்த பிழையைப் பற்றிக் கல்லூரியில் பேசி ஒரு பட்டிமன்றமே நடத்தினார்கள்.

மயூரிக்கு இப்போது அந்தப் பேச்சு முக்கியம் அல்ல.

ஆனால் வசந்திக்கு ஆறு மாதம் முடிந்த பிறகும் வயிற்றுச் சுமையை அகற்றினார்களே? தனக்கு மட்டும் இப்போது இந்த நாலு மாதத்தில் ஏன் முடியாது?

சாந்திமதி அதற்கும் பதில் வைத்திருந்தார்.

''அவள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்திருப்பாள்'' என்றார். ''நீ நோஞ்சானாக இருக்கிறாயே. உன் உடம்பு அதையெல்லாம் இப்போது தாங்காதும்மா. உன் உயிருக்கே ஆபத்தாகிவிடும். ஒரு வேளை, உன் உயிரைப் பற்றிய அக்கரை உனக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் என் மருத்துவ மனையின் பெயரும் சேர்ந்து போய்விடும். அதனால் நிச்சயமாக இந்த வேலை இப்போது நான் செய்ய முடியாது. இங்கே மட்டுமல்ல. எங்கேயும் யாரும் செய்ய மாட்டார்கள்'' என்று விளக்கத்தோடு கூறி முடித்தார்.

மேலே பேச்சின்றி மயூரி எழவும், ''உன் உடம்பு பலவீனமாக இருக்கிறது. மயூரி சில 'டானிக்' எழுதித் தருகிறேன்... அல்லது மருத்துவ மனைக்கு இலவசமாக வந்தது கூட இருக்கும். எடுத்துத்தரச் சொல்கிறேன். அவைகளை ஒழுங்காகச் சாப்பிட்டுவா. பின் மாதங்கள் இலகுவாக இருக்கும்'' என்றார் சாந்திமதி.

பின் மாதங்களா? அதுவரை இதை யார் சுமந்து கொண்டிருக்கப் போகிறார்களாம் என்று உள்ளூரக் கனன்றாள் மயூரி.

ஆனால் யார் மீதோ காட்டப்பட வேண்டிய கோபம். அதற்குக் கையாலாகாமல் வேறு யார் யாரிடமோ அதிலும் அவளிடம் அக்கறை காட்டுகிறவர்களிடம் ஆத்திரப்படுகிறோமோ என்று யோசிக்கும் அளவுக்குப் புத்தியும் இருந்ததால், தன்னை அடக்கிக் கொண்டு அமைதியாகவே அவளால் பேச முடிந்தது.

''உடம்பு நன்றாகி விட்டதும் அப்புறம் 'அபார்ஷன்' செய்து கொள்ளலாமில்லையா டாக்டர்?'' என்று மெதுவாகக் கேட்டாள் மயூரி.

''அபார்ஷனா?'' என்று சற்றுத் திகைத்துவிட்டு, ''அதுஉன் உடம்பு மனநிலை மாறுதல்களைப் பொறுத்து. அப்போது பார்ப்போம்'' என்று சாதாரணமாக முடித்து விட்டார் சாந்திமதி.

உடல் ஆரோக்கியம் பெற்று மாறக்கூடும். மனது மாறாமல் அப்படியேதானே இருக்கும் என்று எண்ணிக் கொண்டாள் சின்னவள்.

சீக்கிரமே நல்ல ஆரோக்கியத்தைப் பெற்று விடும் வேகத்தில் கண்டபடி தின்று உள்ளதையும் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணி மருத்துவரிடமே ஆலோசனை கேட்டு அதன்படியே சாப்பிட்டு, உடல் நிலையை விரைவாகத் தேற்றிக் கொள்ள மயூரி முழு முயற்சி செய்தாள்.

ஆனால் நாலு மாதங்களுக்கும் மேலாக அவளால் அலட்சியப்படுத்தப்பட்டிருந்த ஆரோக்கியம், நத்தை வேகத்தில்தான் அவளுக்குத் திரும்பத் தொடங்கியது.

வீட்டுக்கு வரும் டெலிஃபோன் அழைப்புகளைக் கவனிப்பது மற்ற பணியாட்களின் வேலையை மேற்பார்வை யிடுவது தாமரையோடு செஸ், ஸ்கிராபிள் என்று விளையாடுவது என்று புதிய சஞ்சலங்கள் ஏதுமின்றி வாழ்க்கை செல்லவே அவளதுஉடல் நிலையும் ஒருவாறு மெதுவாகத் தேறத் தொடங்கியது.

இந்த நிலையில்தான் அது நேர்ந்தது..

ஒருநாள், தாமரையுடன் அமர்ந்து செஸ் விளையாடிக் கொண்டிருந்தபோது திடுமென மயூரியின் வயிற்றினுள் ஏதோ செய்தது. வலியோ உபாதையோ அல்ல. அது தொடர்ந்து இருக்கவும் இல்லை. திடுமெனத் தோன்றியது போலவே அடையாளமே இல்லாமல், அது மறைந்தும் போயிற்று. ஆனால் ஏதோ நிகழ்ந்தது என்பது மட்டும் அவளுக்கு நிச்சயம்.

தொடரவில்லை என்பதால் பெரிதாக 'ஒன்றுமிராது' என்று ஒதுக்கி விட்ட போதும், உள்ளூர ஏதோ உறுத்தியது. வயிற்றுக்குள் ஏதோ இடம் பெயர்ந்தாற்போல் என்ன அது?

உடம்பின் உள்ளுறுப்புகள் பற்றிப் பள்ளியில் படித்திருக் கிறாள். வயிற்றுள் எது அப்படித்தானாக நகரக் கூடும்?

''உன் ஆட்டம், காயை நகர்த்தாமல் என்ன யோசனை மயூரி!'' என்று தாமரை கேட்ட பிறகுதான் மயூரி நிகழ்வுக்குத் திரும்பி வந்தாள்.

அவளது திகைத்த தோற்றத்தைக் கவனித்து விட்டு, ''அம்மா அப்பா நினைவு வந்து விட்டதா? எதிர்பாராமல் உயிர் இழப்புகள் நேர்ந்தால் திடீர் திடீர் என்று நினைவுகள் வருவதைத் தவிர்க்க முடியாது என்று அப்பா சொல்லுவார். ஆனால் நீதான் அதைக் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும்?'' என்று மற்றவள் பரிவுடன் கூற பேச்சு வேறு திசையில் சென்றது.

மனோதத்துவ நிபுணரான தந்தை சொன்ன பல கதைகளைத் தாமரை சுவைபட விவரிக்கும் போது மயூரிக்குத் தன் விஷயங்களில் இருந்து மனதைத் திருப்புவது இலகுவாக இருக்கும். எனவே அவளும், அதில் ஆவலாகவே கலந்து கொள்வாள்.

இன்றும் மனதின் வலிமை பற்றித் தாமரை ஓரிரு கதைகளைக் கூற அதைக் கேட்டிருந்த மயூரி குழம்பினாள்.

ஒரு காட்சியைக் காண்பதை வெகு தீவிரமாக வெறுத்த ஒருவனுக்கு உடலளவில் எந்தக் குறைபாடும் இல்லாமலே கண் தெரியாமல் போயிற்றாம்.

எவ்வளவு தீவிரம்?

மயூரியும்தான் இந்தப் பிள்ளை வேண்டாம் என்று வெகு தீவிரமாக நினைக்கிறாள். ஆனால் அது பாட்டில் வளர்ந்து கொண்டே போகிறதே!

மேடிடத் தொடங்கியிருந்த வயிற்றைக் கவலையுடன் பார்த்த மயூரிக்கு இந்த மனோ தத்துவத்தை நம்ப முடியவில்லை.

அல்லது அவள்தான் தேவையான அளவு தீவிரமாக நினைக்கவில்லையா?

இதைவிடத் தீவிரமாக எப்படி நினைப்பது?

அந்த விசித்திர அனுபவம் மயூரிக்கு மறுநாளும் ஏற்பட்டது.

இதைச் சும்மா வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. டாக்டரிடம் சொல்லிவிட வேண்டும் என்று அவள் எண்ணுகையில் மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய வேலை ஒன்றும் வந்து சேர்ந்தது.

காலையிலேயே தன் பணியைத் தொடங்கி விடும் சாந்திமதி, வெறும் சத்துமாவுக் கஞ்சியோடு, மருத்துவ மனைக்குச் சென்று விடுவார். பொதுவாகச் சுமார் பத்து மணியளவில் வந்து காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொள்வது அவரது வழக்கம். ஆனால் அன்று வேலை அதிகம் இருந்ததால் சிற்றுண்டியை மருத்துவமனைக்கே அனுப்பும்படி தகவல் வந்தது.

தெரு முனையில்தான் மருத்துவமனை இருந்தது. எனவே இதுபோன்ற தருணங்களில் மற்றவர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தால் சாந்திமதியின் உணவை மயூரியே கொண்டு போய்க் கொடுத்து விடுவாள்.

அன்றும் அதுபோலச் சென்று சாந்திமதி உண்ணும்போது தன் அனுபவம் பற்றி அவரிடம் கூறினாள்.

ஒன்றும் சொல்லாமல் உணவை முடித்துக் கொண்ட சாந்திமதி ''உடனடியாக ஒரு வேலை இருக்கிறது. அது

முடிந்ததும் உன் விஷயம் பார்ப்போம். அதுவரை என்னோடு வருகிறாயா?" என்று அவளை உடன் அழைத்துச் சென்றார்.

அப்படி அவர்கள் இருவரும் சென்ற இடம் 'ஸ்கேன்' எடுக்குமிடம். ஒரு பெண்ணுக்கு எடுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

படுத்திருந்த பெண்ணின் அருகில் திரையில் தெரிந்த கறுப்பு வெள்ளைப் படத்தில் மயூரிக்கு முதலில் எதுவும் புரிய வில்லை.

ஆனால் சாந்திமதி திரையின் அருகே சென்று "இதோ பார் சுமித்ரா, இதுதான் உன் அருமைப் பிள்ளை. கை, கால்களைச் சும்மா வைத்திராமல் அங்குமிங்கும் பாய்வதைப் பார். படு சுட்டி. இதோ குழந்தையின் தலை. இது... கண். கண்ணை மூடித் திறக்கிறதுபார். அப்படியே உன் சாயல்" என்று காட்டினார்.

மயூரி திகைத்து நின்றாள்.

அவளது அந்த விசித்திர அனுபவம் அவள் வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கும் கருவின் இதுபோன்றதொரு அசைவு. அதற்கும் இதைப்போல திரையில் தெரியும் குழந்தையைப் போலவே, கை, கால், உடம்பு, தலை என்று எல்லாமே உருவாகியிருக்கும். அதாவது அது ஜடமல்ல. அசைவற்ற வெறும் உயிர்ப் பிண்டமல்ல. தன் விருப்பமாய் உடல் உறுப்புகளை அசைக்கக் கூடிய... அசைத்துக் கொண்டிருக்கும் குழந்தை. சிந்தித்துச் செயலாற்றும் சிசு.

இதை அழிப்பதற்கும், பெண் பிறந்தால் கள்ளிப் பால் ஊற்றிக் கொலை செய்கிறார்களே அதற்கும் என்ன வித்தியாசம்?

வெளியே வந்தபின் கொல்லுவதும், கொல்வதற்காக வெளியேற்றுவதும்... எல்லாம் ஒன்றுதானே?

சமய சந்தர்ப்பம் தெரியாமல் வயிற்றுச் சிசு மீண்டும் அசைந்துவிட, மயூரி விதிர் விதிர்த்து நின்றாள்.

ஓரக் கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு, "ஓகே, சுமித்ரா, 'ஸ்கேன்' படி உன் குழந்தைக்கு எந்தக் குறையும் இல்லை. எனவே தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம். 'ஸ்கேன்' படங்களை, நாளை வந்து வாங்கிக் கொள்ளச் சொல்லு. வரட்டுமா? பை" என்று படுத்திருந்தவாறே, திரையில் தன் பிள்ளையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவளிடம் சாந்திமதி விடை பெற்றுக் கிளம்பினார்.

"வா, மயூரி"

சாந்திமதிக்கு மயூரியைப் பார்க்க பாவமாகத்தான் இருந்தது. ஆனால் இந்தக் குழந்தை அவசியம் என்றே, மன நல மருத்துவருடைய மனைவியான, அந்த வைத்தியப் பெண்மணிக்குத் தோன்றியது.

பொதுவாகக் கணவனும் மனைவியுமாக அவரவர் நோயாளிகளைப் பற்றிக் கலந்து பேசுவதுண்டு. இருவர் தொழிலுக்குமே, அது நலம் கூட்டுவதாக இருந்தது. இருவருமே அறிந்திருந்த விஷயம். அதுபோலவே மயூரியின் விஷயமாகவும் பேசினர். இருவருக்குமே அதில் ஒத்த கருத்துதான்.

இந்தக் கருவைக் கொடுத்தவனிடம் உள்ள வெறுப்பில், பிள்ளை வேண்டாம் என்பதில் மயூரி உறுதியாக இருந்தபோதும், அவள் இந்த விவகாரம் அனைத்தையும் மறந்து வேறொரு வாழ்வு வாழக்கூடும் என்று இருவருமே நினைக்கவில்லை. வெறும் சோகம் காலப்போக்கில் மறந்துவிடும். ஆனால் மயூரியின் தீவிரம் அப்படிப் பட்டதல்ல. நீறு பூத்த நெருப்பு போன்றது. உள்ளே தீ எரிந்து கொண்டே இருக்கும்.

இது இன்னோர் உறவை ஏற்பது கடினம்.

வாழ்வில் தனி மரமாக நிற்பது, எவ்வளவு கொடுமை என்று தொழில் ரீதியில் பல்வேறு மனிதர்களைப் பார்த்தறிந்த டாக்டருக்குத் தெரியும். இந்தக் குழந்தையாவது இருந்தால், மயூரிக்கு நன்றாக இருக்கும் என்பது அவரது அபிப்ராயம். குழந்தை பிறந்து விட்டால், பாசம் தானாக வந்துவிடும். ஆனால் பெற்றுக் கொள்வது பற்றிய கடைசி முடிவு அவளுடையதாகத்தானே இருக்க முடியும்?

வேண்டும் என்றுதான் மயூரியை சாந்திமதி 'ஸ்கேன்' அறைக்குக் கூட்டிச் சென்றது. அவர் எதிர்பார்த்த குழப்பம், சின்னவளின் முகத்திலேயே தெரிந்து விடவும் திரும்ப அவரது அறைக்கு அழைத்து வந்தார்.

சாந்திமதியாக மயூரியிடம் எதுவும் கேட்கவில்லை. மயூரியும் சாந்திமதியிடம் எதுவும் சொல்லவுமில்லை. இறுகிப்போன முகத்துடன் கொண்டு போன சாப்பாட்டுச் சாமான்களை எடுத்துக் கூடையில் வைத்தவள், வெறும் தலையசைப்புடன் வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்.

தொடர்ந்த சில தினங்களிலும், மயூரி இறுகிப் போய் குழப்பம் தெளியாத குமுறலுடன்தான் நடமாடினாள்.

ஆனால், 'என் உடம்பு பலப்பட்டு விட்டதா?' 'ஆரோக்கியம் மீண்டு விட்டதா?' என்பன போன்ற குறிப்பான கேள்விகள் எதுவும் சாந்திமதியிடம் வரவில்லை.

தொடர்ந்து அதே நினைவாக இருக்க முடியாமல் வீடு விழாக் கோலம் பூண்டது. தாமரையின் திருமணப் பேச்சு, தீவிரமாகி அன்று அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள்.

தன்னை அச்சுறுத்திய மனப் போராட்டங்களில் இருந்து தப்பிக்கும் வழியாக மயூரியும் இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டாள். தாமரையைக் கேலி செய்வதும், வீட்டை அலங்கரிப்பதுமாக மனம் மற்றவற்றை எண்ணவும் அவள் முகமும் சற்று தெளிந்தது. தன் குழப்பத்தை மறக்கவே பிடிவாதமாக மற்றதை எண்ணினாள் என்று கூடச் சொல்லலாம்.

ஆனால், தாமரையைப் பெண் பார்க்கவென்று, பெற்றோருடன் வந்த மனுபரதனைக் கண்டதும் முன்னிலும் அதிகமாக அதிர்ந்தாள் அவள்.

10

கருவுற்றிருப்பதை அறிந்ததும், அதை அழித்துவிடுவதில் மயூரிக்கு வெறியே இருந்தது.

பெற்றோரின் மரணம், பயனற்ற தியாகம், எவ்வளவோ முயன்றும் அடியோடு மறக்க முடியாமல் அவளைக் குன்ற வைத்த கடற்கரை வீட்டுச் சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் காரணமானவனின் வித்து என்பதே அவளுள் வெறுப்பை கொப்பளிக்க வைத்திருந்தது.

அதனால், அந்த வித்தை அழித்துவிடுவதிலும் பிடிவாதமாக இருந்தாள்.

ஆனால் இப்போது அந்த வித்து, முழு உருவம் பெற்றுவிட்ட குழந்தை என்றானதும் அவள் திக்கு முக்காடிப் போனாள்.

அந்தக் குழந்தையுடைய தந்தை ஒரு கொலைகாரனாகவே இருக்கலாம்... இருக்கலாம் என்ன? கொலைகாரனே தான். அவளுடைய பெற்றோரைக் கொன்றவன்.

ஆனால் அதற்காக அவன் பிள்ளையைக் கொல்வது எப்படிச் சரியாகும்?

அதே சமயம் யாரோ ஒரு கொலைகாரனுடைய பிள்ளையை அவள் சுமந்து பெற்றாக வேண்டும் என்றால் அதுவும் மயூரிக்கு அநியாயமாகப்பட்டது.

மனுபரதனுடைய குழந்தை அவளுள் 'களுக் முளுக்' கென்று ஜாவியாகச் சுற்றிக் கொண்டு இருக்கிறது என்று நினைக்கும் போதெல்லாம் அவளுக்கு உடல் நடுக்குற்றுத் தூக்கிப்போட்டது.

ஆனால், என்ன செய்வதென்றோ, சற்றும் புரியவில்லை.

அது அவளுடைய குழந்தை என்று நினைக்கவே அவளுக்குத் தோன்றவில்லை.

ஆனால் இப்போது அதை அழிக்கவும் மனம் வரவில்லை. ஆனால் அதைப் பிள்ளையாகக் கருதிப் பராமரிக்கவும் பிடிக்கவில்லை

எதுவும் பிடிக்காமல், என்ன செய்யவும் முடியாமல் அதைப்பற்றி நினையாதிருக்கவும் இயலாமல் மயூரி தவித்துக் கொண்டிருந்த போது தாமரையின் திருமணப் பேச்சு வரவே, அவள் அதை ஆவலாகப் பற்றிக்கொண்டாள்.

குறைந்த பட்சமாக எண்ணச் சிறையில் இருந்தேனும் விடுதலை கொஞ்சமேனும்.

எனவே அதே கவனமாக வேலை செய்யத் தொடங்கினாள்.

வீட்டை அலங்கரிப்பது அவளுடைய பெற்றோர் செய்தது கண்டு அவள் அறிந்த கலை. அதை இப்போதும் நன்றாகவே செய்ய முடிந்தது.

ஒத்த வயதினளான தாமரையை எவ்வளவோ கேலி பண்ண முடியும். அந்த வீட்டில் அவள் ஒரு அலுவலாள் என்று பாகுபாடு காட்டுவதும் கிடையாது. ஆயினும் 'என்ன கனவா?' 'அவர் நினைவா?' என்பன போன்றவைதான், அவளது பெரிய கேலிப் பேச்சுக்களாக இருந்தன. அவையும் கூட தாமரைக்காகச் சொன்னவைதான்.

படிக்கும்போது வகுப்புத் தோழி வசந்தியை எல்லோருமாகக் கேலி செய்தது அவ்வப்போது நினைவு வந்து, நெஞ்சில் வலித்தது. எல்லாவற்றையும் கசக்கடித்துவிட்டானே.

பிடிவாதமாக அந்த நினைவுகளை அகற்றிக் கொண்டு முயன்று சிரித்துப் பேசினாள் மயூரி.

அந்தப் படித்த குடும்பங்களுக்கிடையே, பெண் பார்த்தல் என்பது சாதாரணமாக தெரிந்தவர் வீட்டுக்கு வந்து போவது போல நடந்தது.

மருத்துவர் குடும்பம் வீட்டிலிருந்தது.

விருந்தினராக மாப்பிள்ளை வீட்டார் வர அறிமுகத்தின் பின் எல்லோருமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

முன்னரே சாந்திமதி சொல்லி வைத்திருந்தபடி, சிற்றுண்டியை அனுப்பிவிட்டு பின்னோடு பழச்சாறை எடுத்துக் கொண்டு மயூரி ஹாலுக்குள் சென்றாள்.

'ட்ரே'யை டீபாயின் மீது வைத்துவிட்டு நிமிர்ந்த போது தான் மயூரி மனுபரதனைப் பார்த்தாள்.

இவன்.

நல்லவேளையாகத் தட்டைக் கீழே வைத்த பிறகு அவனைப் பார்த்தாள். இல்லையென்றால் எல்லாம் கீழே விழுந்து உடைந்திருக்கும்.

மனுபரதனுக்கும் அதிர்ச்சி தான். அதிலும் அவளது தோற்றத்தில் தெரிந்த மாறுபாடு இன்னமும் அதிகப்படியான அதிர்ச்சியே!

காட்டிக்கொள்ளாமல் அவன் அமர்ந்திருக்க மயூரியும் சமாளித்துக் கொண்டு தன் வேலையில் முனைந்தாள்.

இனிப்பு காரத்தை சரி விகிதமாக அவள் எடுத்து வைத்துக் கொடுக்க தாமரை அந்தத் தட்டுக்களை எல்லோரிடமும் கொண்டுபோய்க் கொடுத்தாள்.

தட்டைக் கையிலேயே வைத்துத் தான் உண்ண வேண்டும் என்பதில்லாமல் சபாபதி - சாந்திமதி வீட்டில் இரண்டிரண்டு சோஃபாக்களுக்கு இடையில் சதுரமான சிறு கண்ணாடி மேஜைகள் இருந்தன. அடுத்து பழச்சாறு நிரம்பிய கண்ணாடித் தம்ளர்களையும் சிற்றுண்டித் தட்டுக்கள் அருகே வைத்து முடித்தபோது தாமரையுடைய தம்பி சிவா, முதல் கோளாறைத் தொடங்கி வைத்தான்.

வறுத்த முந்திரிப் பருப்பை எடுத்தவன், கவனமின்றிக் கண்ணாடித் தம்ளரைத் தட்டி விட்டான்.

சலவைக்கல் தரையில் கண்ணாடி உடைந்து சிதறியது.

அவசரமாகக் குனிந்து உடைந்த துண்டுகளைப் பொறுக்கி பழச்சாறு கொண்டு வந்த ட்ரேயில் சேகரிக்கத் தொடங்கினாள் மயூரி.

''என்ன பைத்தியக்காரத்தனம்'' என்று எரிச்சலுடன் கூறி அவளைப் பற்றி எழுப்பி அங்கிருந்து அகற்றி நிறுத்தினான் மனுபரதன்.

அவள் ஆத்திரத்துடன் முறைக்கவும், ''இப்படி எடுத்தால் கண்ணாடி கையில் குத்தி விடாதா?'' என்று காரணம் சொன்னான்.

திரும்பி சபாபதியைப் பார்த்து ''யாராவது பணியாளை அழைத்துச் சுத்தம் செய்யச் சொல்லுங்கள் சார்'' என்றான்.

''அதுதானே நடந்து கொண்டிருக்கிறது'' என்று முணு முணுத்துவிட்டு உள்ளே சென்று, முறம், துடைப்பம், ஈரத்துணி சகிதம் திரும்பி வந்து, யாரையும் நிமிர்ந்து கூடப் பாராமல் அந்த இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு, மயூரி திரும்பிச் சென்றாள்.

அறையைக் கடக்கும்போது மனுபரதனிடம் ஒரு குரோதப் பார்வை மட்டும்.

பார், பார். உன்னால் என் நிலைமை என்ன ஆகிவிட்டது பார். வீட்டு வேலை செய்யும் பணியாளாக இருக்கிறேன். இப்போது சந்தோஷம்தானே? என்று கேட்டது பார்வை.

போகிற போக்கில் மிஞ்சி மிஞ்சி இரண்டேவினாடிப் பார்வையோடு அதற்கு மேல் நில்லாமல் மயூரி உள்ளே போய்விட்டாள்.

உலக மகா உத்தமனைப் போலப் பெற்றோரோடு பெண் பார்க்க வந்துவிட்டானாக்கும்? இருந்திருந்து இவனையா தாமரை மணப்பது?

தன் அவமானத்தை முழுவதாக வெளியிடாமல் இந்தத் திருமணத்தைத்தடுப்பது எப்படி? இப்போதே அவமானம் தான் என்றாலும் ஏதோ நடந்துவிட்டது. பாவம் என்ற எண்ணம் தான் எல்லோருக்கும். ஆனால் முழு விவரம் தெரிந்தால்...

மயூரி தீவிரமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது, தாமரைவந்து, அவளைக் கூப்பிட்டாள்.

''மிஸ்டர் மனுபரதன், உன்னோடு பேச வேண்டுமாம். அப்பாவின் அலுவல் அறையில் இருக்கிறார். போய்ப் பேசு.'' என்றாள் அவள்.

''என்னிடமா? என்ன பேச வேண்டுமாம்'' என்று தடுமாறினாள் மயூரி. அவளைத்தெரியாதவன் போல நடிப்பான் என்று எண்ணினால்.. அவன் பேச அழைக்கிறானே என்று அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

''அங்கே போய் அவரிடம் கேட்டால் தெரிந்து விடுகிறது'' என்று முறுவலித்தாள் தாமரை.

அவளைப் பார்க்க வந்தவன்.

என்ன கதை சொல்லியிருப்பான்?

தாமரை சொன்னது போல அவனிடம் கேட்டால் தெரிந்து விடுகிறது.

எழுந்து சபாபதியின் அலுவல் அறையை நோக்கி நடந்தாள் அவள்.

மனுபரதன், தன்னிடம் என்ன கேட்கக் கூடும் என்பது பற்றி மயூரிக்கு ஓர் ஊகம் இருந்தது.

தாமரையுடைய பெற்றோர் இருவருமாக, நிறையச் சம்பாதித்து வைத்திருந்தனர்.

அதன்படி தாமரைக்கும் நிறையச் சொத்து உண்டு. அழகி. படித்திருக்கிறாள். நல்ல குணம் வேறு.

எல்லாம் அறிந்து தானே பெண் பார்க்க வந்திருக்கிறான்.

அந்தத் திருமணத்திற்கு இடையூறு செய்துவிடாதே என்று கேட்கக் கூப்பிட்டிருப்பான்.

அதற்குச் சம்மதிக்கக் கூடாது என்பதோடு, மனுபரதனிடம் நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி, நாலு வார்த்தை சொல்ல வேண்டும்'என்று எண்ணிக் கொண்டுதான், மயூரி, சபாபதியின் அலுவல் அறைக்குள் சென்றாள்.

ஆனால் மனுபரதன் கேட்ட முதல் கேள்வியிலேயே அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

அவளது மேடிட்டிருந்த வயிற்றைக் காட்டி ''இது என் குழந்தை...அதாவது நம் குழந்தை அப்படித்தானே?'' என்று கேட்டான் அவன்.

கேட்டான் என்பதைவிட நன்றாகத் தெரிந்த ஓர் உண்மையை அறிவித்தான் எனலாம்.

ஆனால் அவளையே கண்டு கொள்ளமாட்டான் என்று அவள் நினைத்ததற்கு மாறாகக் குழந்தைக்கே சொந்தம் கொண்டாடுகிறானே. ஏன்?

மயூரி பேச்சிழந்து நிற்கவும் ''என் ஊகம் சரிதான் என்று தோன்றுகிறது'' என்றான் அதே குரலிலேயே.

சுதாரித்து கொண்டு ''அப்படித்தான் என்று என்ன நிச்சயம்? அதற்கு முன்னரே இந்தக் குழந்தை உருவாகியிருக்கலாம்'' என்று அசட்டையாகக் கூறினாள் அவள்.

''வாய்ப்பில்லை!'' என்றான் அவன் இலகுவாக.

அவள் சற்று ஏளனமாக நோக்கவும், ''அப்போது நீ ஒரு கன்னி'' என்றான் அவன் தணிவாக.

கொதித்து விட்டது அவளுக்கு. ஒரு பெண்ணின் கன்னித் தன்மையை அழிப்பது எவ்வளவு சாதாரணமாக இருக்கிறது இவனுக்கு. அவள் மட்டும் என்னமாய்த் தவித்தாள். ஆத்திரத்துடன் ''அதன் பிறகு இதை இலகுவாகக் கருதி எத்தனை பேருடன் பழகினேன் தெரியுமா? அப்போது கூட இந்தப் பிள்ளை வந்திருக்கலாம்'' என்று மிகவும் அலட்சியம் போலக் காட்டிச் சொன்னாள் மயூரி.

அவளுள் ரத்தம் வடிவதை உணர்ந்தவன் போல ''சாரிம்மா'' என்றான் அவன் இரங்கிய குரலில். ''நீ அதிக நாகரீகமாகத் தோன்றினாய்.. உரிய பாதுகாப்போடு வந்திருப்பாய் என்று நினைத்தேன்...''

''ச்சு! அதெல்லாம் எனக்கு என்ன தெரியும்?'' என்று அலுப்புடன் தொடங்கியவள் சட்டென நிமிர்ந்து ''அதாவது அப்போது'' என்று முடித்தாள்.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு அவன் சொன்னான். ''இதெல்லாம் தேவையில்லை மயூரி. இது என் குழந்தை

என்பது எனக்கு நிச்சயம். என் பெற்றோரிடம் சொல்லப் போகிறேன். அதன்பின்...''

குறுக்கிட்டு ''எல்லாவற்றையுமா? மகாக் கேவலமாக இருக்குமே'' என்று குத்தினாள் மயூரி.

ஒப்புதலாய் தலையசைத்து, ''உண்மை தான். உன்னைப் பற்றி அவர்கள் கேவலமாக நினைப்பது அவ்வளவு சரியில்லை தான்'' என்றான் மனுபரதன்.

''உங்கள் செயலை மட்டும் மிக உன்னதமாக ஏற்றுக் கொள்ளவார்கள் போல. அருமையான தாய் தந்தைதான்.''

அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு ''ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது உனக்கே தெரியும். ஆனால் ஏதோ இப்படியாகிவிட்டதே என்று மட்டும் சொல்லிவிட்டு, இது பற்றி மேலேபேச விருப்பமில்லை என்று தெரிவித்தால் அதற்கு மேல் அவர்கள் நோண்டாமல் கௌரவமாக ஒதுங்கிக் கொள்வார்கள்.'' என்றான் அவன்.

''உயர்ந்த கோட்பாடுகளுடன் கூடிய ஒட்டுதலான குடும்பம் போலத் தெரிகிறது.''

அவளது நக்கலுக்கு பதில் கூறாமல் தன் பேச்சைத் தொடர்ந்தான் அவன். ''தடுக்கவும் மாட்டார்கள்.''

''தடையா? எதற்கு?''

''நம் திருமணத்துக்கு.''

திருமணமா?

மெய்யாகவே அவள் திகைத்துப் போனாள்.

''இரண்டு நாள் சுகத்துக்கு வாழ்க்கை முழுவதும் வட்டி செலுத்தக் கூடாது பார்'' என்றதும் இதே வாய்தானே.

தன் பதிலும் நினைவு வர ''எப்படி முடியும்?'' என்றது அவளது நாவு.

''என்னால் தாயாக்கப்பட்டவள். 'என் குழந்தை அனாதையாக வளரக் கூடாது. இந்தப் பெண்ணை மணப்பதே முறை' என்று சொன்னால் என் பெற்றோர் ஒத்துக் கொள்வார்கள்'' என்று அவளது கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

லேசாகத் தலை சரித்து அவனை நோக்கினாள் அவள்.

''என்ன?''

''நான் ஒத்துக் கொள்ள வேண்டாமா?''

மனுபரதன் திகைத்தான்.

11

அதுவரையிலும் தன் பெற்றோரின் கருத்தைப் பற்றி மட்டும் தான் மனுபரதன் யோசித்துக் கொண்டிருந்தான்.

அதிலும் இந்தப் பெண் பார்த்தலுக்குப் பெற்றவள் பிடிவாதமாக இழுத்து வந்த விதத்தில் தாய்க்குத் தன் மகனின் நடவடிக்கைகள் பற்றி அதிருப்தி தோன்றிவிட்டது என்பது அவனுக்கு நிச்சயம்.

எனவே மயூரியை மருமகளாகப் பெற்றோர் ஏற்பது பற்றியே அவனது எண்ணம் சுழன்று கொண்டிருந்தது. ஆனால், அவளுள் வளர்வது தன் பேரக் குழந்தைஎன்ற உண்மை

தாயைச் சமாதானப் படுத்தி விடும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

தந்தையும் அப்படித்தான். இருவருமே மகன் வழி வாரிசுக்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்கள். எனவே அவர்களை ஏற்க வைத்து விடலாம் என்று எண்ணினான்.

மயூரியைப் பொறுத்தவரையில் அவளுக்குத் தன்னிடம் வெறுப்பே இருந்தாலும், அவளுடைய குழந்தைக்கு ஒரு அப்பா தேவை தானே? கூடவே அவளுக்கும் ஒரு கணவன் அவசியமே! ஏனெனில் ஒரு கன்னித்தாய் நம் நாட்டில் என்ன பாடுபடவேண்டியிருக்கும் என்பது அவன் அறியாததா?

எனவே அவள் பேச்சு ஆச்சரியமூட்ட, ''ஏன் ஒத்துக்கொள்ள மாட்டாய்?'' என்று வினவினான்.

திமிரா? இவன் ஆண்பிள்ளை கல்யாணம் செய்து கொள்ள முன்வந்து விட்டான் என்பதால், காலில் விழுந்து நன்றி சொல்வாள் என்று எதிர்பார்த்தானா?

வாய்ப்பை விடாமல் ''இருந்திருந்து உன் ... உங்களையா?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டாள். கண்கள் வெறுப்பை உமிழ்ந்தன.

சிறு மௌனத்தின் பின் ''பார் மயூரி, இப்போது நீ என்னை எவ்வளவு வெறுத்துக் கொண்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். அதனால் நீயும் நானும் வாழும் வாழ்வு எவ்வளவு சிரமமானதாக இருக்கப் போகிறது என்பதையும் ஊகிக்க முடிகிறது. அது எத்தனை ஆண்டுகளோ? ஆனால் அதை விட முக்கியமானது, குழந்தை விஷயம். தந்தை பெயர் தெரியாததாகப் பிறந்து அவமானப்படுவதும், மன

வேதனையோடு வளர்வதும் கூடாது என்றே இந்த முடிவெடுத்தேன். குழந்தை பற்றிய அக்கறை உனக்கும் இருக்கும்..." என்று அவன் சொல்லிக் கொண்டு போனபோது மயூரிகுறுக்கிட்டாள்.

''எப்படி இருக்கும்?'' என்று சுருக்கமாகக் கேட்டாள். ''அக்கறை. அது எப்படி இருக்கும்?''

''அக்கறை இல்லாமலா, இதைச்சுமந்து பெற்றுக் கொள்ள முடிவு செய்தாய்?''

ஏளனமாகச் சிரித்தாள் மயூரி.

அவன் யோசனையாகப் பார்க்கவும், ''அங்குள்ள கடன் சாமான் எல்லாம் கொடுத்து முடித்து விட்டு இங்கே தில்லை நாயகம் அங்கிளின் இல்லத்துக்கு வந்து சேர்ந்தபிறகுதான் கருவுற்றிருந்த விவரமே, எனக்குத் தெரிய வந்தது. தெரிந்ததுமே கலைத்து விட விரும்பினேன். ஆனால் இல்லத்து விதிகளில், அதற்கு அனுமதி இல்லை. ஆனால் கருவை அழித்தே ஆகவேண்டும் என்பதற்காகவே இல்லத்தை விட்டு வெளியேறி இங்கே வேலைக்குச் சேர்ந்தேன். ஆனால் அதிக நாள் ஆகிவிட்டதால் என் உடம்பு தாங்காது என்று சொல்லி டாக்டர் மறுத்து விட்டார்கள். அதனால் இது வளர்ந்து கொண்டு இருக்கிறது. எனக்கு எவ்வளவு அக்கறை இருக்கும் என்பது இப்போது புரிந்திருக்குமே'' என்று தெள்ளத்தெளிவாக ஓர் எக்களிப்போடு மயூரி வினவினாள்.

இவன் பிள்ளையைப் பெற வேண்டும் என்று இங்கே, அவள் துடித்துக்கொண்டிருப்பதாக நினைப்பா? இவனுக்கு இந்தக் குட்டு அவசியம் தான், என்று ஆங்காரத்தோடு எண்ணினாள்.

அவனது திகைப்பு, அவன் முகத்தில் தெரியவே செய்தது. ஆயினும், அதை விரைவில் சமாளித்து கொண்டு ''இந்தக் குழந்தையிடம் பிடிப்பு இருக்கிறது. இல்லை என்று எண்ணாமல், ஒரு பிஞ்சு மனம் வெம்புவது பற்றிச் சிந்தித்துப்பார். ஒரு குழந்தையிடம் கொடூரம் காட்டுகிற அளவு நீ கல் நெஞ்சுக்காரியோ, கெட்டவளோ அல்லவே' என்றான் அவன்.

''அதாவது உங்களைப் போன்றவள் அல்ல என்கிறீர்களா?''

ஒருதரம் அவளைக் கூர்ந்துவிட்டு ''ரொம்பவே சிரமப்பட நேரும் என்பது நன்றாகவே புரிகிறது. ஆனாலும் என் குழந்தையை அனாதையாக விடும் அளவுக்கு நான் பொறுப்பற்றவன் அல்ல. என்ன சொல்லுகிறாய்?'' என்று மனுபரதன் மீண்டும் திருமணப் பேச்சை எடுத்தான்.

அவளது குத்தலை, மனுபரதன் பொறுத்துப் போவது மயூரிக்கு வியப்பை அளித்தது.

கடற்கரை வீட்டில் மறுமுறை கூறுமுன், இது போன்ற குத்தல் பேச்சுக்களை அவன் நிறுத்தி விட்டது நினைவு வந்தது.

மட்டம் தட்டலைப் பொறுக்காதவன் தான்... ஆனால் இப்போது சகிக்கிறான்.

அவன் பிள்ளைக்காக!

அப்படி உருகிவிடுமா? தன் பிள்ளை அவமானப்பட்டு விடுமே என்று எதிர்காலத்தையே பணயம் வைக்கிறானே!

அவளுள்ளேயே வளர்ந்த போதும் அவளுக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லையே?

ஒரு பிஞ்சு.. பாவம், என்னபாடு படப்போகிறதோ, என்று சற்று இரங்கினாலும் இந்த அளவுக்கு கலக்கம் ஒன்றும் இல்லையே?

யோசனை ஓடும்போதே சட்டெனத் தோன்றியது.

அவனது இந்த உருக்கம், அவளது கரத்தில், ஓர் ஆயுதமாகப் பயன்படக் கூடும்.

கூடவே, அவளது தாலியற்ற தாய்மையின் கேவலமும் மாறும். இல்லத்தோடு தொடர்புள்ள ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் பார்வையே ஒரு விதமாகத்தானே இருக்கிறது.

ஆனால், அவளது அழகான குடும்பத்தைச் சிதறடித்தவன். அவளுடைய அன்பான பெற்றோர் இறக்கக் காரணமான இவனை மணப்பதற்கு ஆதரவாகத் தன் மனம் சிந்திப்பதை உணர்ந்த போது அவள் திகைத்துப் போனாள்.

என்ன இது?

அவளது பதிலுக்காக, மனுபரதன் காத்திருப்பதைக் கண்டு ''நா... நான் யோசிக்க வேண்டும்'' என்றாள் முடிந்தவரை மிடுக்காக.

''ரொம்ப முக்கியம். இப்போதாவது செய்'' என்று அவன் சீரியசாகச் சொல்லவும் மயூரி திடுக்கிட்டாள்.

இதுவரை அவள் யோசிக்கவே இல்லை என்கிறானா?

ஆத்திரத்துடன் நிமிர்ந்தால் லேசாக முறுவலித்து, ''சின்ன ஜோக்'' என்றான் மனுபரதன்.

''கொஞ்சமும் ரசிக்கவில்லை'' என்று முகம் திருப்பிச் சென்றாள் அவள்.

ஆனால் மனதுள் உறுத்தியது. அவள் யோசித்தது போதாதா, அல்லது யோசித்தவிதம் சரியில்லை என்கிறானா?

எப்படியும் அவன் 'ஜோக்'காகச் சொல்லவில்லை என்றே, அவளுக்குத் தோன்றியது.

பெற்றோரிடம் சொன்னது போலவே, பெண் பார்க்க வந்த இடத்திலும் ஓரளவு மட்டுமாய் உண்மையைக் கூறி மனுபரதன் நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டான்.

''தப்பே செய்தாலும், அதை வெளிப்படையாக ஒத்துக் கொண்டு பிள்ளைப் பொறுப்பை ஏற்கிறவர் எத்தனைபேர்? ஒன்று நழுவி ஓடுவார்கள். அல்லது ஒளிவு மறைவாகச் செய்வார்கள். அந்த விதத்தில் மிஸ்டர் பரதன் உத்தமரே'' என்று தாமரையே சொன்னாள்.'' இது ஒரு நல்ல வாய்ப்பு மயூரி. அசட்டுத் தனமாகத் தவற விட்டுவிடாதே. இந்தத் திருமணத்தின் மூலம் பழைய தவறுகள் அத்தனையும் நேர்செய்யப்பட்டு விடும். அப்பா அப்படித்தானே சொல்லுகிறார்'' என்றாள் அவள்.

தந்தை ஒன்று சொல்லி விட்டால் அவளுக்கு அது தான் வேதம்.

மயூரிக்கும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தது.

அந்தத் தந்தை, அவளுக்கு இல்லாமல் ஆக்கியவனைப் பழி வாங்காமல் கல்யாணமா செய்து கொள்வது? ஆனால்....

அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடாது. யோசிக்க வேண்டும். யோசிக்கத் தெரியவில்லை என்றானே. அவனே அசரும் அளவுக்கு யோசிக்க வேண்டும்.